1974 ஏப்ரல் 3] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அவர்களுடைய ஆடிட்டர் அனுப்பிய வகையில் கூட—
on 28th December 1973, under the heading "Receipts", grant-in-aid from State Government.
என்று சொல்லிவிட்டு மேலும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(a) advance teaching grant,

(b) fee compensation grant,

(c) final teaching grant,

(d) supplemental teaching grant என்று அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள்.
'fee compensation grant' என்று அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆகவே, இன்று அது கிராண்ட் அல்ல என்று வாதிடுவது பொருந்தாது. அவர்களே ஒப்புக்கொண்டு கிராண்ட் தாருங்கள், காம்பன்சேஷன் கிராண்ட் தாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, இதிலே எந்தவிதமான உண்மைக்கு மாறான செய்தியும் இல்லை. 26—10—73 அன்று கொடுத்த விளக்கத்திலே எந்தவிதமான மாற்றமும் இல்லை. இதிலே கல்லூரிக் கல்வி இயக்குநர் எந்த முறையிலே நடந்து கொள்ளவேண்டுமென்று அரசாங்கமே தெரிவித்திருக்கிறது. அதிலே உரிமைப் பிரச்சினை எதுவும் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதன்மேல் என்னுடைய தீர்ப்பை பிறகு தெரிவிக்கிறேன்.

(4) ஒத்திவைப்புத் தீர்மானம்

எஸ்.எஸ்.எல்.ஸி. ஆங்கில வினாத்தாள் வெளியானதாகக் கூறப்படுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள்—

'Under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, I do hereby give notice to move that the proceedings of the Assembly be adjourned to discuss a matter of urgent public importance, viz., the leakage of English question papers for the S.S.L.C. examination that is being conducted currently'.

என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டுமென்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அது எப்படி பேரவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து விவாதிக்கும் அளவிற்கு முக்கியத் துவம் வாய்ந்தது என்பது பற்றிச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நடை பெறுகிற எஸ்.எஸ்.எல்.சி. வினாத் தாளில் ஆங்கிலத் தேர்வு பற்றிய வினாத் தாள் வெளியாகிவிட்டது என்று பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. அதன் விளைவாக பல மாணவர்கள் ஆங்கிலத் தேர்வைச் சரியாக எழுத முடியவில்லை. வினாத்தாள் வெளியாகிறது என்றால் அதனைப் பாதுகாத்து வைக்கின்ற ஏற்பாட்டிலே பெரும் குறை இருப்பதைத்தான் அது காட்டுகிறது. அதை நம்பிப் போகிற மாணவர்கள் சரியாக விடை எழுத முடியாமல் தோற்றுப் போகிற நிலைமையும் ஏற்படுகிறது. இத்தகைய நிலைமை இதற்கு முன்னால் கூட இந்த மாநிலத்திலே ஏற்பட்டிருக்கிறது.

இப்படி தொடர்ந்து ஏற்படுவது என்றால் இந்த வினாத்தாள்களைத் தயாரித்து தேர்வுக்கு அனுப்புகிற முறையில் அடிப்படையில் ஏதோ கோளாறு இருக்கிறது, அது சரியாக நடைபெறவில்லை என்பதைக் எடுத்துக்காட்டுகிறது. இது மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கக்கூடிய பிரச்னை.

ஒரு ஆண்டு படித்து விட்டு வினாத்தாள்கள் வெளியாகி, தப்பான வினாத்தாள்கள் வெளியாகி, அது தெரிந்து கடைசி நேரத்தில் அவற்றை மாற்றக்கூடிய சூழ்நிலையில் ஒரு ஆண்டு படிப்பும் கெட்டு விடும் அபாயம் இருக்கிறது.

ஆகவே, இப்படிப்பட்டவர்களைத் தடுக்க என்ன செய்யலாம் என்பதற்கான யோசனைகளைக் கூற வதற்கும், மாணவர்களின் எதிர் காலம் நல்ல முறையில் இருக்க இந்தத் துறை ஒழுங்காக இயங்கப் பயன்படும் அளவில் இந்த அவையை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்கவேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் கொண்டு வந்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு எவ்வித ஆதாரமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இது பத்திரிகையில் வந்த ஒரு வதந்தியே தவிர வேறு அல்ல. ஆகவே, ஆங்கில வினாத்தாளோ அல்லது வேறு எந்த வினாத் தாளுமோ வெளியாகவில்லை என்பதை நான் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட வதந்திகள் கிளம்புவது என்பது எல்லாக் காலங் களிலும் இருந்து வருகிற ஒன்று. மாணவர்கள் இன்னின்ன வினாக்கள் வரும் என்று படித்துவிட்டு அவை வராமல் போகிற நிலைகளெல்லாம் உண்டு. ஆகவேதான் வதந்திகளை நம்ப வேண்டாம் என்று அடிக் கடி சொல்கிறோம். வினாத்தாள்களை உருவாக்குவது, வைப்பது, அச்சடிப்பது இவை எவ்வளவுக்கெவ்வளவு பாதுகாப்பான முறையில் வைக்கவேண்டுமோ அதற்கேற்ற வகையில் பாதுகாப்பான முறைகளில் தான் வைக்கப்படுகிறது.

இது கூட குறிப்பிட்ட ஒரு நாளிதழைத் தவிர வேறு எந்த நாளிதழிலும் வந்ததாகத் தெரியவில்லை. நான் எல்லா நாளிதழ் களையும் புரட்டிப் பார்த்தேன். கேள்வித்தாள் வெளியான விஷயம் அறிந்து கல்வித் துறை மூன்று மணி நேரத்திற்குள் கேள்வித் தாள்களை மாற்றியமைத்தது என்றால் அப்படி மூன்று மணி நேரத்திற்குள் வேறு வினாத்தாள்களை தயாரித்து அச்சிடமுடியாது. அப்படிச் செய்து சென்னை முழுவதும் பரப்பவும் முடியாது. தமிழகம் முழுவதும் இரண்டு லட்சத்து சில்லறை மாணவர்கள் எழுதுகிற வகையில் அப்படிச் செய்ய முடியாது.

ஆகவே, அந்தச் செய்திக்கு எந்தவித ஆதாரமும் இல்லை. ஆங்கில வினாத்தாள் அவுட்டாகி, அந்த வினாத்தாளை நம்பி மாணவர் கள் உருப்போட்டு பரீட்சை எழுதுவதாகச் சொல்வது, அங்கேதான் பரிதாபகரமான நிலை இருக்கிறது. ஆகவே நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட வதந்திகளை நம்பக் கூடாது. பத்திரிகைகள் அப்படிப்பட்ட வதந்திகளை பரப்புவதில் ஈடுபடாமல் இருத்தல் நல்லது. மாணவர்களிடையே ஒரு பீதியை ஏற்படுத்தி விடக்கூடாது.

திடீரென்று உத்தரவு போட்டு மாற்றிக் கொடுக்கப்பட்டது ஆங்கில வினாத்தாள் என்று சொல்வது சரியல்ல. தமிழகம் முழுவ தற்கும் ஒரே நாளில் ஆங்கில வினாத்தாள் தரப்படுகிறது, மற்ற வினாத்தாள்களும் தரப்படுகின்றன. ஆகவே, வினாத்தாள் வெளி யாகியது என்பது சரியல்ல.

வதந்திகளைக் கிளப்புவதோடு சிலர் விஞத்தாள்களை தாங்களே தயாரித்து விற்றுக்கொண்டும்கூட வருகிருர்கள். சில நகரங்களில் அது பிடிக்கப்படக்கூடச் செய்தது. ஆகவே, பீதிக்கு இடம் தர வேண்டாம்.

இதற்கு செய்தித்தாள்களும் ஓரளவிற்கு ஒத்துழைப்புத் தர வேண்டும். பீதியைக் கிளப்பாமல் இருக்க மாணவர்களுக்கு சங்கடத்தை உருவாக்காமல் இருப்பது நல்லது. ஆதாரம் இல்லாத இப்படிப்பட்ட செய்திகளை வெளியிடுவது சரியல்ல. விஞத்தாள்கள் வெளி வந்திருக்குமானுல் முன்கூட்டியே தகவல் தந்திருந்தால் ஒப்பிட்டு தவறு இருந்தால் திருத்திக்கொள்ள அல்லது நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கமுடியும்.

ஆனுல் இந்தச் செய்தியைப் பொறுத்தவரையில் மூன்று மணி நேரத்திற்குள் மீண்டும் முழுவதையும் மாற்றிவிட இயலாது. சென்னை நகரில்கூட மாற்ற முடியாது.

முதலில் எந்தக் கேள்விகள் தரப்பட்டனவோ அவைகள்தான் வந்திருக்கின்றன. ஆகவே, அவையை ஒத்திவைத்து விவாதிப்பதற்கு இதில் ஒன்றுமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்தி வைத்து இப்பொருள் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(5) கவன ஈர்ப்பு

(அ) குமரி மாவட்டத்தில் பருவமழை தவறியதும், நியாய விலையில் அரிசி வழங்கவும், நிலவரி விலக்கு அளிக்கவேண்டியதன் அவசியமும் குறித்து.

<u>திரு. ஏ. பாலையா</u> : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பருவமழை தவறியதின் காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல் பயிர் கருகி, தீய்ந்து, குறிப்பாக குளச்சல் சட்டமன்றத் தொகுதியில் தளக்குளம், கடியப்பட்டிணம், மணவாளக்குறிச்சி, இராஜக்கமங்கலம் ஆகிய கிராமங்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் அந்தக் கிராமங்களுக்கு நியாய விலையில் அரிசி வழங்கவும், தீய்ந்து